முதல் கூடுதல் சார்பு நீதிமன்றம், ஈரோடு, ஈரோடு மாவட்டம்.
முன்னிலை - திரு.எஸ்.விஜய் அழகிரி, பி.காம்.,பி.எல்.,
முதல் கூடுதல் சார்பு நீதிபதி,
2024 ம் வருடம் அக்டோபர் மாதம் 04 ம் நாள் வெள்ளிக்கிழமை
(திருவள்ளுவராண்டு 2055 – ஸ்ரீ குரோதி வருடம் - புரட்டாதி திங்கள் 18 ம் நாள்)
இடைநிலை மனு எண்.6/2024
அசல் வழக்கு எண்.856/2022

தெய்வசிகாமணி ..மனுதாரர்/3 ம் பிரதிவாதி

// எதிர் //

1. சரவணன்,
2. செண்பகவள்ளி ..எதிர்மனுதாரர்கள்/வாதிகள்

11.06.2024 ம் தேதியிட்ட இம்மனு உ.வி.மு.ச. கட்டளை 9, விதி 7 மற்றும் பிரிவு 151 ன்படி மனுதாரர்/3 ம் பிரதிவாதிக்கு எதிராக அசல் வழக்கில் 21.04.2023 தேதியில் பிறப்பிக்கப்பட்ட ஒருதலைபட்ச உத்தரவை ரத்து செய்து இந்த மனுவுடன் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிர்வழக்குரையை ஏற்றுக் கொள்ளக் கோரப்பட்டுள்ளது.

இம்மனு இந்நீதிமன்றத்தின் முன்பாக 27.09.2024 ம் தேதி இறுதியாக விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு, மனுதாரர் தரப்பில் திரு.M.தினகரன், வழக்கறிஞர் அவர்களும், எதிர்மனுதாரர்கள் தரப்பில் திரு.P.பழனிசாமி, வழக்கறிஞர் அவர்களும் ஆஜராகியும், இருதரப்பு வாதுரைகளைக் கேட்டும், இதுநாள்வரையில் இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து மனு கோப்பைப் பரிசீலனை செய்து, இன்று இந்நீதிமன்றம் வழங்கும்

உத்தரவு

மனுதாரருக்கு எதிராக அசல் வழக்கில் 21.04.2023 தேதியில் பிறப்பிக்கப்பட்ட ஒருதலைபட்ச உத்தரவை ரத்து செய்து இந்த மனுவுடன் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிர்வழக்குரையை ஏற்றுக் கொள்ளக் கோரி மனுதாரரால் இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. மனு உரையின் சுருக்கம் பின்வருமாறு:

மனுதாரர் அசல் வழக்கில் 3 ம் பிரதிவாதி என்றும், எதிர்மனுதாரர்கள்/வாதிகள் மனுதாரர் மற்றும் மற்றவர்கள் மீது விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி அசல் வழக்கை தாக்கல் செய்துள்ளதாகவும், அசல் வழக்கில் 21.04.2023 தேதி இந்த மனுதாரர் எதிர்வழக்குரை தாக்கல் செய்ய வாய்தா போடப்பட்டிருந்தது என்றும், மனுதாரர் வெளியூர் சென்றுவிட்டதாகவும், உடல்நிலை சரியில்லாத காரணங்களால் தனது வழக்கறிஞரை சந்தித்து எதிர் வழக்குரை தயார் செய்து நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய முடியவில்லை என்றும், 21.04.2023 ம் தேதி எதிர்வழக்குரை தாக்கல் செய்யாத காரணத்தினால் மனுதாரருக்கு எதிராக ஒருதலைப்பட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டது என்றும், அதனை ரத்து செய்யாவிட்டால் பெருத்த கஷ்டம் ஏற்படும் என்று கூறப்பட்டுள்ளது.

3. <u>எதிர் உரையின் சுருக்கம் பின்வருமாறு:</u>

மனுவில் கூறியுள்ள சங்கதிகள் அனைத்தும் தவறானது என்றும், மனுதாரர் உடல்நிலை சரியில்லாத காரணத்தினாலும், வெளியூர் சென்றுவிட்ட காரணத்தினாலும் எதிர்வழக்குரை தாக்கல் செய்ய இயலவில்லை என்று கூறியுள்ள நிலையில் அதனை நிரூபிக்கம் பொருட்டு எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றும், அசல் வழக்கில் வ.சா.1 முதல் விசாரணை செய்யப்பட்டு பிரதிவாதிகள் தரப்பில் வ.சா.1 குறுக்கு விசாரணை செய்ய வேண்டி அசல் வழக்கு நிலுவையில் உள்ள நிலையில் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், இந்த மனுதாரர்/3 வது பிரதிவாதி அசல் வழக்கைக் காலம் கடத்துவதற்காக இந்த மனுவைத் தாக்கல் செய்துள்ளார் என்றும், அசல் வழக்கில் இந்த மனுதாரருக்கு எதிர்வழக்குரை தாக்கல் செய்யப் போதிய கால அவகாசம் வழங்கப்பட்டும் எதிர் வழக்குரை தாக்கல் செய்யவில்லை என்றும், இந்த மனுவிற்கு எந்த நல்ல எண்ணமும் இல்லையென்றும், இம்மனுவில் கூறியுள்ள சங்கதிகளில் நியாயமில்லை தவறானது என்பதால் இம்மனு தள்ளுபடி செய்ய வேண்டுமென்று கூறப்பட்டுள்ளது.

4. இந்த மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பதே இந்த மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சினையாகும்.

5. <u>பிரச்சினைக்குத் தீர்வு:</u>

மனுதாரர் தரப்பில், மனுதாரர் அசல் வழக்கில் 3 ம் பிரதிவாதி என்றும், எதிர்மனுதாரர்கள் /வாதிகள் மனுதாரர் மற்றும் மற்றவர்கள் மீது விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி அசல் வழக்கை தாக்கல் செய்துள்ளதாகவும், அசல் வழக்கில் 21.04.2023 தேதி இந்த மனுதாரர் எதிர்வழக்குரை தாக்கல் செய்ய வாய்தா போடப்பட்டிருந்தது என்றும், மனுதாரர் வெளியூர் சென்றுவிட்டதாகவும், உடல்நிலை சரியில்லாத காரணங்களால் தனது வழக்கறிஞரை சந்தித்து எதிர் வழக்குரை தயார் செய்து நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய முடியவில்லை என்றும், 21.04.2023 ம் தேதி எதிர்வழக்குரை தாக்கல் செய்யாத காரணத்தினால் மனுதாரருக்கு எதிராக ஒருதலைப்பட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டது என்றும், அதனை ரத்து செய்யாவிட்டால் பெருத்த கஷ்டம் ஏற்படும் என்று வாதிடப்பட்டது.

5.2 எதிர்மனுதாரர் தரப்பில், மனுவில் கூறியுள்ள சங்கதிகள் அனைத்தும் தவறானது என்றும், மனுதாரர் உடல்நிலை சரியில்லாத காரணத்தினாலும், வெளியூர் சென்றுவிட்ட காரணத்தினாலும் எதிர்வழக்குரை தாக்கல் செய்ய இயலவில்லை என்று கூறியுள்ள நிலையில் அதனை நிரூபிக்கம் பொருட்டு எந்த ஆவணம் ஏதும் தாக்கல் செய்யவில்லை என்றும், அசல் வழக்கில் வ.சா.1 முதல் விசாரணை செய்யப்பட்டு பிரதிவதிகள் தரப்பில் வ.சா.1 குறுக்கு விசாரணை செய்ய வேண்டி அசல் வழக்கு நிலுவையில் உள்ள நிலையில் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், இந்த மனுதாரர்/3 வது பிரதிவாதி அசல் வழக்கைக் காலம் கடத்துவதற்காக இந்த மனுவைத் தாக்கல் செய்துள்ளார் என்றும், அசல் வழக்கில் இந்த மனுதாரருக்கு எதிர்வழக்குரை தாக்கல் செய்யப் போதிய கால அவகாசம் வழங்கப்பட்டும் எதிர் வழக்குரை தாக்கல் செய்யவில்லை என்றும், இந்த மனுவிற்கு எந்த நல்ல எண்ணமும் இல்லையென்றும், இம்மனுவில் கூறியுள்ள சங்கதிகளில் நியாயமில்லை தவறானது என்பதால் இம்மனு தள்ளுபடி செய்ய

வேண்டுமென்று வாதிடப்பட்டது.

5.3 மனுதாரர் அசல் வழக்கில் 3 வது பிரதிவாதி ஆவார். மனுதாரர் தரப்பில் எதிர்வழக்குரை தாக்கல் செய்ய 21.04.2023 தேதியன்று வாய்தா போடப்பட்டிருந்தது என்றும், அசல் வழக்கில் மனுதாரர் எதிர் வழக்குரை தாக்கல் செய்யாததால் அவருக்கு எதிராக ஒருதலைபட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. அசல் வழக்கில் இந்த மனுதாரர்/3 வது பிரதிவாதிக்கு எதிராகவும் பரிகாரம் கோரப்பட்டுள்ளது. அசல் வழக்கில் இந்த மனுதாரருக்கு எதிராகப் பரிகாரம் கோரப்பட்டுள்ளதால் அசல் வழக்கை இறுதியாகவும், முறையாகவும் முடிவு செய்வதற்கு இந்த மனுதாரர்/3 வது பிரதிவாதியின் எதிர்வழக்குரையும் அவசியம் ஆகும். எனவே, அசல் வழக்கில் இந்த மனுதாரருக்கு எதிர் வழக்குரை தாக்கல் செய்ய ஒரு வாய்ப்பு வழக்குவது அவசியம் என இந்நீதிமன்றம் கருதுகிறது. மனுதாரர் வெளியூர் சென்றதற்கும், மருத்துவ ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்பதற்காக ஒரு வாய்ப்பு வழங்காமல் இருக்க கூடாது. மனுதாரருக்கு வாய்ப்பு வழங்கும்போது எதிர்மனுதாரர்களுக்கு ஏற்படும் சிரமத்தினை செலவுத் தொகைமூலம் ஈடு செய்யலாமென எனக் கருதி இம்மனுவை அனுமதிக்கலாம் என்று இந்நீதிமன்றம் முடிவுக்கு வருகிறது.

முடிவாக இம்மனுவை அனுமதித்து மனுதாரர், எதிர்மனுதாரர்களுக்கு செலவு தொகையாக ரூ.750/-ஐ 24.10.2024 க்குள் செலுத்த வேண்டும் என்றும், தவறும் பட்சத்தில் இம்மனு தானாகவே தள்ளுபடி ஆகும் என்று உத்தரவிடப்படுகிறது. மீண்டும் அழைக்க வாய்தா 25.10.2024.

இவ்வுத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் சுருக்கெழுத்தில் எடுக்கப்பட்டு பின்பு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் சரிபார்க்கப்பட்டு, இன்று 2024 ம் வருடம் அக்டோபர் மாதம் 04 ம் நாள் அவையறிய திறந்த இந்நீதிமன்றத்தில் பகரப்பட்டது.

S VIJAY ALAGIRI Digitally signed by S VIJAY ALAGIRI Date: 2024.10.04 18:36:42 +0530

முதல் கூடுதல் சார்பு நீதிபதி,
ஈரோடு.

சாட்சிய சான்றாவணப் பட்டியல்
(இருதரப்பிலும் .. தாக்கல் இல்லை...)

S VIJAY ALAGIRI Digitally signed by S VIJAY ALAGIRI Date: 2024.10.04 18:36:50 +0530

மு.கூ.சா.நீ., ஈரோடு.